கென்ட் குழந்தைகளுக்கான மையங்கள் (Kent Children's Centres)

குழந்தைகளுக்கு விளையாட்டு...
...உங்களுக்கு ஆதரவு

கென்ட் பகுதியில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் சிறந்த வாழ்க்கைத் துவக்கத்துக்காக உதவுதல்

"சேவைகள் மற்றும் வசதிகளைக் கண்டு நான் மகிழ்கிறேன், என் குழந்தை பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதாக உணர்கிறேன், ஊழியர்கள் எப்போதுமே நட்பாகவும் ஆதரவாகவும் இருக்கிறார்கள். இந்த சேவைகளை நான் தொடர்ந்து பயன்படுத்துவேன்."

புகைப்படங்களுக்கான வாசகங்கள்:
**"முன்பிருந்ததைவிட சேவைகள் எனக்கு அண்மையில் கிடைக்கின்றன, எனவே அவற்றைப் பெறுவது இன்னும் எளிதாக உள்ளது"**

**"ஊழியர்கள் இனிமையானவர்கள், உங்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் அதைக் கேட்க நேரம் ஒதுக்குகிறார்கள். நீங்கள் எப்போதுமே வரவேற்கப்படுவதாக உணரவைக்கப் படுகிறீர்கள்"**

குழந்தைகளுக்கான மையங்கள் என்பவை யாவை?

குழந்தைகளுக்கான மையங்கள், உங்கள் உள்ளூர் சமூகத்தில் உள்ள பெற்றோர், கவனிப்பாளர்கள் மற்றும் 0-5 வயதுக் குழந்தைகளுக்கு சேவைகளை அணுகும் வசதிகளை வழங்குகின்றன

உள்ளூர் சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்ய பலவிதமான சேவைகளை அணுகும் வசதிகளை இந்த மையங்கள் வழங்குகின்றன, உதாரணங்களில் இவையும் அடங்கும்:-

- குடும்ப ஆதரவு மற்றும் பெற்றோர்களை சென்றடைதல்
- பெற்றோர் மற்றும் குழந்தைகள் நேரடியாக வரும் வசதி
- குழந்தை கவனிப்பு வசதி மற்றும் தேசிய குழந்தை கவனிப்பு தாதிகள் சங்கத்துடன் (National Childminding Association) இணைப்புகள்
- குழந்தை கவனிப்புக்கான வாய்ப்புகள் மற்றும் பள்ளி துவக்குவது பற்றிய ஆலோசனை மற்றும் ஆதரவு
- பிரசவத்துக்கு முந்தைய வகுப்புகள் மற்றும் சிசுக்களுக்கான மருத்துவமனைகள்
- தாய்ப்பால் தருதல், குழந்தை வளர்ப்பு, பேச்சு மற்றும் மொழி பற்றிய தகவல் மற்றும் அறிவுரை
- பயிற்சி பெற அல்லது புதிய வேலை தேடுவது பற்றி சிந்திக்கும் பெற்றோர்களுக்கு ஊக்கம் மற்றும் ஆதரவு

- சிறப்புத் தேவைகள் மற்றும் ஊனங்கள் உள்ள குழந்தைகளுக்கான சேவைகள்
- தன்னார்வ நிறுவனங்களுடன் இணைப்புகள்
- உள்ளூர் பள்ளிகளுடன் இணைப்புகள்

மக்கள் கருத்துகள்...
**“2 ½ வயதில் நர்சரிக்குச் சென்ற டேவிட்டின் (David) தேவைகள் கண்டறியப்பட்டன – இப்போது அவனுக்குத் தேவைப்படும் அதிகப்படியான உதவி பெறுகிறான் – படிப்புதவியும் அதனுடன் தொடர்புடைய ஆதரவும் கிடைத்திருக்காவிட்டால் அவன் 5 வயதில் நேராக பள்ளிக்குத்தான் சென்றிருப்பான்”**

**“உங்கள் குறையைக் கேட்பதற்கான செவிகளாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு கோப்பை தேநீராக இருந்தாலும் சரி, ஆதரவும் ஆலோசனையும் எப்போதும் கிடைக்கிறது. வெளி நிறுவனங்கள் மற்றும் சேவைகளை அணுகும் வசதியும் இருக்கிறது. குழந்தைகள் அனைவருக்கும் பல்வேறு வகையான நடவடிக்கைகள் இருக்கின்றன”**

**“என் மகள் குழந்தைகளுக்கான மையத்துக்கு வருவதில் விருப்பமாக இருக்கிறாள், நாங்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் ஆதரவு அளிக்கிறோம்”**

என் குழந்தைகளுக்கான மையம் அருகில் எங்கே உள்ளது?

உங்கள் பகுதியில் குழந்தைகளுக்கான மையம் எங்கே உள்ளது என்று தெரியாதென்றால் தயவுசெய்து தொடர்பு கொள்க -

கென்ட் குழந்தைகள் மற்றும் குடும்பங்கள் தகவல் சேவையை (Kent Children & Families Information Service) 08000 32 32 30 என்ற எண்ணில் அழைக்கவும்

அல்லது மின்னஞ்சல் அனுப்புக childrenscentres@kent.gov.uk

வலைதளம்:

www.kent.gov.uk/childrenscentres
&
www.kentchildrenscentres.org.uk

இந்தப் பிரசுரம், தேவைப்பட்டால் வேறு மொழிகளிலும் வடிவங்களிலும் கிடைக்கும்.
இந்தப் பிரசுரத்தில் உள்ள தகவல் மற்றும் அறிவுரைகள் இது அச்சிடப்பட்ட நேரப்படி சரியானது. பார்வை: cc/03/09